சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து போன்ற வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இப்போது பொதுமக்களின் எதிர்ப்பின் பொருட்டு, நிறுத்தப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டிருக்கிறது. பொதுமக்களின் எதிர்ப்பு இருந்தாலும் கூட, இலட்சக் கணக்கான அளவில் வெங்காயம் தேங்கிக் கிடக்கின்ற காரணத்தினால், அதன் வாயிலாக அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால், விவசாயிகள் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அரசாங்கமே நியாயமான விலைக்கு அவைகளை கொள்முதல் செய்து நம்முடைய நாட்டினுடைய தேவைக்குப் போக மீதியை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நிய செலாவணியை ஈட்டுகின்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதை இப்போது செய்ய இயலாது. நாம் தேசிய கூட்டுறவு விற்பனை இணையத்தை வலியுறுத்தலாம்.

ஆ. கரூர் சாயப்பட்டறைகளிலிருந்து கழிவு நீர் அமராவதி ஆற்றில் கலப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எம். சின்னசாமி, இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, "கரூரில் உள்ள சாயப்பட்டறையில் இருந்து கழிவு நீர் அமராவதி ஆற்றில் கலப்பதால், குடிநீர் கெட்டுப்போவது" பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருச்சி மாவட்டம், கரூர் நகரில் உள்ள 126 சாயத் தொழிற்சாலைகளில் 25 சாயத் தொழிற்சாலைகள் மட்டும் அமராவதி ஆற்றின் கரையில் அமைந்துள்ளன. இத் தொழிற்சாலைகளி

1981 ஏப்ரல் 21] [டாக்டர் எச். வி. ஹண்டே]

விருந்து வெளியேறும் அசுத்த நீரை சுத்தப்படுத்தாமல் அமராவதி ஆற்றில் இருந்து பிரிந்து செல்லும் பஞ்சமாதேவி கால்வாயில் இத்தொழிற்சாலைகள் விடுகின்றன. இதனால் ஆற்றின் நீர் அசுத்தம் அடைகிறது. எனவே கரூர் நகராட்சி சுகாதார அலுவலர் கழிவு நீரை சுத்தம் செய்யாமல் ஆற்றில் விடும் தொழிற்சாலைகளின் மீது தமிழ்நாடு சுகாதார சட்டம் 1939-ன்படி எச்சரிக்கை முன் அறிவிப்பு Notice கொடுத்துள்ளார். மேலும், இவ்வாறு கழிவு நீரை ஆற்றில் விடும் சாயத் தொழிற்சாலைகளின் உரிமத்தை நீக்கத் தேவையான நடவடிக்கையினை பொது சுகாதார இயக்குநர் எடுத்து வருகிறார். கரூர் நகராட்சி மன்றம் தமிழக குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பாதாள சாக்கடை கட்டும் திட்டம் பற்றி ஒரு கருத்துரு அனுப்பியுள்ளது. அத்திட்டம் செயல்படும்பொழுது குடிநீர் அசுத்தமாகும் பிரச்சனை நீங்கி விடும்.

திரு. எம். சின்னசாமி: பேரவைத்தலைவர் அவர்களே, அந்த சாயப்பட்டரையில் இருந்து வெளியாகக்கூடிய கழிவு நீர் குடிநீரிலே கலந்து, அதனாலே பல வியாதிகள் வருகின்றன. இது மிகவும் அத்தியாவசியமான பிரச்சினையாக இருப்பதால் அதன் மீது பொது சுகாதார இயக்குநர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார் என்று இந்த அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கை எப்போது முடியும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றில் இருந்து நாம் இந்தக் கரூர் நகரத்திற்கு தண்ணீர் எடுத்துக்கொண்டு போகி றோம். அதிலே சின்னாண்டார்கோவில் என்ற இடத்தில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் ஒரு ஹெட் ஒர்க்ஸ் இருக் கின்றது. அந்த ஹெட் ஒர்க்ஸிலிருந்து வரக்கூடிய தண்ணீர் நன்றாக இருக்கின்றது. அடுத்தபடியாக ஒரு கிலோ மீட்டரில் இன்னொரு ஹெட் ஒர்க்ஸ் இருக்கின்றது. அந்த இடத்தில் கழிவு நீர் ஆற்றிலே போகாமல் பக்கத்திலே ஒரு லைனிலே போகின்றது. அதை இப் போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். எந்த அளவுக்குத் தண்ணீர் சரியான முறையில் இல்லை என்பதை வாட்டர் அனலி ஸ்ட்டை வைத்து சோதனை செய்து கொண்டிருக்கிறோம். இது மிகவும் அவசரமான நிலை என்று கருதி அரசாங்கம் துரித நட வடிக்கை எடுத்து வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1981 ஏப்ரல் 21

[முற்பகல் 10-50]

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் நகரத்திற்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு இருப்பதாக இந்தக் அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டம் முடிக்கப்பெற்றால் இந்த நிலைமை மாற்றப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் முடிய 3-4 ஆண்டுகள் ஆகலாம். அதுவரையில் இந்தகழிவு நீரைக் குடிநீரில் கலக்காமல் இருக்க மாற்று ஏற்பாடு செய்யப்படுமா? அப்படி விதியை மீறி செய்கிற சாயப்பட்டரைகளின் லைசென்சை முழுமையாக ரத்து செய்யாவிட்டாலும், அந்தப் பாதாள சாக்கடை திட்டம் முடிவு அடையும் வரையிலாவது சஸ்பென்ட் செய்து வைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினருக்கு இருக்கும் சந்தேகம் நியாயமான சந்தேகம் தான். பாதாள சாக்கடைத் திட்டம் வருகிற வரையில் காத்து இருக்கமுடியாது. அது முடிவு அடைய 4—5 ஆண்டுகள் ஆகலாம். ஆகவே, உடனடியாக இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக சில விதிமுறைகளை வைத்து இருக்கிறோம்.

"The dyeing industries have to treat their waste and use the effluent of land after satisfying the conditions laid down in IS 3307-1977 tolerance limits for disposal of Industrial effluence of land for irrigation"

அந்த அடிப்படையில், ஸ்பெஷல் ஆபீசர் டு கவர்ன்மென்ட், டிபார்ட்மென்ட் ஆப் என்விரான்மென்ட் அன்ட் ஹைஜீன் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள அறிக்கையை ஆய்வு செய்து வருகிறோம். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். 25 சிறிய கம்பெனிகள் தான் இதிலே வருகின்றன. அவைகளில் இருந்து வரும் கழிவுநீர்தான் இதிலே வந்து சேரும் அபாயம் இருக்கிறது. அந்தக் கழிவு நீரைத் திருப்பி விட அவர்களையே நடவடிக்கை எடுத்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் அரசாங்கம் அவர்கள்மீது வேறு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைச் சிந்திக்கும்.